# சங்கரன்கோவில் நகராட்சி

2019–ம் ஆண்டு ஜுன் மாதம் 28.06.2019ம் தேதி காலை 11.00 மணிக்கு அவசரக்கூட்டம்

**பொருள் எண் – 649**

**சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.48800/2006/எல் நாள்.20.06.2019ல், தமிழ்நாடு நகராட்சி கணக்குப்பணி என்ற பணியமைப்பின் கீழ் புதிய பணியிடங்களை உருவாக்குவது தொடர்பாகவும், அதற்கு ஈடாக சில பணியிடங்களை திரும்ப ஒப்படைப்பது தொடர்பாகவும் விபரங்கள் தரப்பட்டுள்ளன.**

நகராட்சிகளின் கணக்குகளை இன்றைய தேவைக்கேற்ப பராமரிக்கவும், நிதி மேலாண்மையை திறம்படுத்தவும், **தமிழ்நாடு நகராட்சி கணக்குப்பணி** என்ற பணியமைப்பு உருவாக்கப்படும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சரவர்கள் 1.04.2013 அன்று சட்ட மன்றத்தில் அறிவித்தார் என்றும், தமிழ்நாடு நகராட்சி கணக்குப் பணி உருவாக்குவதற்கான தீர்மானங்களை அனைத்து நகராட்சிகளும் நிறைவேற்றி நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு அனுப்பி வைத்துள்ளன என்றும், அத்தீர்மானங்கள் 13.06.2013 அன்று அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டன என்றும், இதனடிப்படையில் அரசாணை (எம்எஸ்) எண் 26, நகராட்சி நிர்வாக (ம) குடிநீர் வழங்கல் துறை (எம் இ1) நாள்.10.02.2016ல் தமிழ்நாடு நகராட்சி கணக்குப் பணியமைப்பிற்கான பணி விதிகள் (Tamil Nadu Municipal Accounts Service Rules) 2016 உருவாக்கப்பட்டு 11.02.2016 அன்று அரசு கெஜட்டில் வெளியிடப்பட்டது என்றும், நகராட்சி நிர்வாக ஆணையரிடமிருந்து வரப்பெற்றுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2) மேலும், தமிழ்நாடு நகராட்சி கணக்குப் பணியமைப்பின் கீழ் பணியிடங்களை புதிதாக உருவாக்க ஏதுவாக செம்பாக்கம், வாலாஜாப்பேட்டை, வந்தவாசி மற்றும் கீழக்கரை நகராட்சிகள் தவிர அனைத்து நகராட்சிகளும் தலா ஒரு இளநிலை உதவியாளர் பணியிடத்தை திரும்ப ஒப்படைத்து (Surrender) தீர்மானம் நிறைவேற்றி நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு அனுப்பி வைத்தன என்றும் அத்தீர்மானங்கள் 07.07.2017 அன்று அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டன என்றும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3) தற்போது தமிழ்நாடு நகராட்சி கணக்குப்பணியின் (Tamil Nadu Municipal Accounts Service) கீழ் முதல்நிலை நகராட்சிகளுக்கு ஒவ்வொரு நகராட்சிக்கும் கீழ்கண்டவாறு புதிய பணியிடங்கள் உருவாக்கிட திருத்திய கருத்துரு அரசுக்கு 03.01.2019 அன்று அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| முதுநிலை கணக்கர் | Senior Accountant | 1 |
| கணக்கு உதவியாளர் | Accounts Assistant | 1 |

மேற்கண்டவாறு Tamil Nadu Municipal Accounts Service பணியமைப்பில் கணக்குப் பணிக்கான பிரத்யேக பணியிடங்களை உருவாக்குவதற்கு ஈடாக ஏற்கனவே தமிழ்நாடு நகராட்சி பொதுப்பணியில் (Tamil Nadu Municipal General Service) **கணக்கு பணி தொடர்பாக உருவாக்கப்பட்டுள்ள பணியிடம் / பணியிடங்களையோ அல்லது வேறு பணியிடத்தையோ ஒவ்வொரு நகராட்சியும் கூடுதல் சம்பள செலவினை தவிர்க்கும் பொருட்டு திரும்ப ஒப்படைக்க வேண்டியுள்ளது என்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் தெரிவித்துள்ளார். இந்நகராட்சிகளில் கீழ்காணும் பணியிடத்தினை திரும்ப ஒப்படைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**

**இளநிலை உதவியாளர் பணியிடங்கள் – 2 (இரண்டு)**

**அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**தீர்மானம் அனுமதிக்கப்பட்டது,**

**நாள் – 27.06.2019**

**தனிஅதிகாரி மற்றும்**
**ஆணையாளர்,**
**சங்கரன்கோவில் நகராட்சி.**